**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 6.ஸ்ரீபகிரம பட்டர்**

---

அன்று மதிய உணவைச் சீக்கிரம் உண்ணும் ஆசையுடன் தன் வீட்டுத்திண்ணைப் பள்ளியில் பாடம் முடித்த பட்டர் வீட்டுக்குள் நுழைகிறார்.

அன்று சமையல் மணக்கிறது.பொதுவாகவே மிக அருமையாகத் தளிகை செய்யும் அவர் மனைவி அன்று மிக ஸ்ரத்தையுடன் சமைத்திருந்தார்.சில நாட்களாகக் கணவர் வெளியூர் சென்று திரும்பிய காரணத்தால் சமையல் அல்லோலப்பட்டது.

பகிரம பட்டர் பைடனிபுரத்தின் சிறந்த ஆசிரியர்களுள் ஒருவர். மிக நன்றாக கல்வி-கேள்வியை மாணவர்களுக்கு அளிக்கும் சரஸ்வதி கடாக்ஷம் கொண்டவர்.அதன் காரணத்தால் தேசத்தின் பல ஊர்களில் இருந்தும் அவரிடம் பயில வரும் மாணவர்கள் அதிகம்.

ஏட்டுக் கல்வியிலும் உலக ஞானத்திலும் கைதேர்ந்த பகிரம பட்டரின் பயிற்சியின்கீழ் பல மாணவர்கள் பல துறைகளில் சிறந்து விளங்கும் பணிகளைச் செய்தனர்.

மாணவர்தம் கல்வி ஞானமும் கேள்வி பலமும் பக்குவமும் குணமும் அவர்களை இவரது மாணவர்கள் என்று காட்டிக் கொடுத்துவிடும்.

**<u>மனைவி திறந்த கதவு</u>**

இலை போடப்பட்டது.மிக அருமையான உணவை உரிய வகையில் கணவருக்கு பகிரமரின் மனைவி பரிமாறுகிறாள். ஒரு காயை எடுக்க உள்ளே செல்கிறார், அச்சமயத்தில் பட்டர் கூட்டை ருசி பார்க்க, அதில் உப்பு குறைந்திருக்க அவருள் ஆர்வம் குறைய, வாய் வார்த்தை வெளியாகிறது.

”கூட்டில் ஏன் உப்பு சரியாக இல்லை? என்ன தான் சமைக்கிறாயோ?” - இவ்வரி மனைவியார் காதில் விழ, அவருள் இருந்த ஞானமயமான இறைவன் சமையல் அறைக்குள்ளேயே முனுமுனுக்கிறான்.

**<u>”வயது 60த்தாண்டியும் நாவில் அடக்கம் இல்லையே இவருக்கு?!”</u>** - மனைவி தனக்குத் தானே விசாரணைக்காகச் சொன்ன வார்த்தைகள் இவரது காதுகளில் விழ, அப்போது அவருள் ஒரு ஞானப்பொறி மிளிர ஆரம்பித்தது.

*"உண்மை தானே?! 60 வயதில் ஒரு உப்பைக் கூட ருசிக்குக் குறை கூறும் நான், உயிர் பிரியும் தருவாயில் இந்த உலகப் பற்றுக்களை எப்படி விடப்போகிறேன்!? என் கல்வி எல்லாம் வெறும் ஏட்டுச்சுரைக்காய் தானே?! கற்றதையும் கேட்டதையும் வாழ்க்கையில் செயல்முறைப்படுத்தினால் தானே விழிப்புணர்வு ஏற்படும்? ஆஹா! துளஸிதாஸருக்கு மமதா பாய் [மனைவி] வழிகாட்டியது போல இன்று இவள் என அகக்கதவை திறந்து விட்டாளே!"* என்று மனம் மகிழ்ந்து மாறும் தன்மைக்கு ஆசைப் படுகிறார்.அதுவல்லவா ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியம்?

அன்று முதல் அவர் தன் ஆன்மா உய்ய வழி தேடினார்.வெற்று மனத்துடன் வேதம் ஓதுதலும், புரியாமல் செய்யப்படும் சடங்குகளும் ஆன்மா உய்ய வழி காட்டாது என்பதை உணர்ந்து, அடாவடித்தனமாய் வேற்று சமயத்தில் சேர்ந்தார்.அச்சமயத்தில் உள்ள ஆன்மீக விஷயஞானங்களைக் கற்றும் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை.எனவே மீண்டும் சனாதன மார்க்கத்தைப் பின்பற்ற ஆரம்பித்த போது, ஊரார் அவரை ஒதுக்கினர்.வேற்று சமயத்தில் சேர்ந்த காரணத்தால் ஊரை விட்டு வேற்றிடம் சென்ற அவரை மீண்டும் ஊருக்குள் வர அனுமதி தர மறுத்தனர்.வெற்றுச் சாதியும் வீண் மதவாதமும் அவரைத் தளர்ச்சி செய்தது.

**இறந்து பிறந்த அன்பர்**

அப்போது அவர் அமைதியாக வேறு இடத்தில் மனைவியுடன் வாழும் சமயத்தில் ஸ்ரீநாக நாத் என்ற மஹானைச் சந்திக்கிறார்.அவரை குருவாக அடிபணிந்து தன் வாழ்க்கையின் போக்கினை எடுத்துக் கூறி ஆன்மீக வழிகாட்டுமாறு வேண்டினார்.

அம்மஹான் தன் கைத்தடியால் இவரது உச்சந்தலையில் லேசாகத் தட்ட இவர் மூர்ச்சி விழுந்தார். மீண்டும் தன் தெய்வீக பலம் கொண்டு இவரை அவர் எழுப்பினார்.

*"ஐயா! நீர் இறந்து மீண்டும் பிறந்துள்ளீர்! புதிய வாழ்க்கை வாழ்க! ஆன்மா கடைத்தேற ஒரே வழி தூய அன்பும் தன்னலம் கலக்காத இறை பக்தியும், மக்கள் சேவையுமே ஆகும். கலியுகத்தில் அதிகம் பக்தியில் தெய்வீக நாமத்தை ஜெபித்தபடியே உன் பணிகளைச் செய்யும்.அவற்றையே விழிப்புணர்வுடன் மக்களுக்குச் செய்யும்.சமூஹப்பொறுப்பு கூடிய கடமையாகச் செய்யும்! இறப்பு என்பது உன் அலைபாயும் மனதுக்கு ஆகும்! சனாதன தர்மத்தில் யாரும் மதமாற்றம் ஆக முடியாது.அது மதமே அல்ல! அது ஒரு மார்கம்.அதில் நடப்பதும் விலகுவதும் அவரவர் விருப்பு வெறுப்பே*

***ஆகும்!"*** - இவ்வாறு ஸ்ரீநாகநாத் ஆன்மீக அறிவுரை கூறினார்.

அன்று முதல் அவர் தன் இஷ்ட மூர்த்தியாகிய பாண்டுரங்கனை வழிபட்டு, ஸ்ரத்தையுடன் தன் ஆசிரியர் பணியைப் பலகாலம் சமூஹத்துக்கு அர்ப்பணித்து, படிப்படியே பலவகைப் பக்குவங்களையும் பெற்றார்.ஒரு கட்டத்தில் அவரும் அவர் மனைவியும் சதா பக்தியிலும் சேவையிலும் காலத்தை செலவிட்டு அமைதியாக இறைவனைச் சேர்ந்தனர்.

**<u>உட்கருத்து:</u>**
ஆன்மீகம் வேறு மதம் வேறு.ஆனால் ஆன்மீகம் என்ற கோயிலுக்குள் நுழைய மதம் ஒரு வழி ஆகும்.இவரது வாழ்க்கை இக்காலத்தில் மதம் மாறி வாழும் பலருக்கு எடுத்துக்காட்டாக இருக்கும்.இன்று இவரது வரலாற்றை இறையருள் எழுதத் தூண்டிய போது, காலை சென்னை-பெசன்ட் நகர் வேளாங்கண்ணி மாதாவை தரிசிக்கச் சென்று வந்தேன். அப்போது பல ஸ்ரீவைஷ்ணவர்கள் தேவாலயத்தினை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டதைக் கண்டேன்.அவர்கள் மத வேற்றுமை இன்று ப்ரஹ்மம் ஒன்றே என்று உணர்ந்து ஆலயத் தூய்மையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

**பாண்டுரங்கன் அன்பர்கள் வாழ்க்கையில் பலரது வரலாற்றில் அவர்கள் இன்ன தெய்வத்தை தான் உபாசித்தனர் என்று கூறவில்லை.தெய்வீகத்தைத் தன்னுள் பெற்று உயர்ந்தனர்.பாண்டுரங்கன் என்பது ப்ரஹ்ம தத்துவம்! அதனால் தான் அதற்கு "பக்த விஜயம்" என்று பொதுப்பெயர் சூட்டினர் முன்னோர்.**

ஹரி ஓம்!